தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

**நவம்பர், திசம்பர் - 2015**

**A031** தமிழக வரலாறு

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. மேற்கு மலைத் தொடரின் மிக உயரமான சிகரம் எது?
2. மேற்கு தொடர்ச்சி மலைகளில் உள்ள கணவாய்கள் எவை?
3. பழந்தமிழகத்தின் சிறந்த ஏற்றுமதிப் பொருட்கள் எவை?
4. தமிழக வரலாற்றை அறிய உதவும் தொல்பொருள் சான்றுகளைக் கூறுக.
5. தமிழகத்துடன் வாணிகத்தொடர்பு கொண்டிருந்த கீழை நாடுகள் எவை?
6. கடை ஏழு வள்ளல்கள் யாவர்?
7. களப்பிரர் காலத்தில் வாழ்ந்த ஆழ்வார்கள் எவரெவர்?
8. பல்லவர்கள் பற்றி அறிய உதவும் சான்றுகள் யாவை?
9. நிகண்டு நூல்களில் குறிப்பிடத்தக்கன எவை?
10. எம்மண்டலமும் கொண்டருளியவன் என்னும் பட்டப் பெயர் கொண்டவன் யார்?
11. ஏகோஜிக்குப் பிறகு தஞ்சை மராட்டிய அரியணை ஏறி ஆட்சி செய்தவர்கள் யாவர்?
12. ஆங்கிலேயர் ஆட்சியில் ஏற்பட்ட கலகங்கள் யாவை?
13. மாண்டேகு – செம்ஸ்போர்டு திட்டத்தின் கீழ் வடிவமைக்கப்பட்ட அரசியலுக்கு என்ன பெயர்?
14. நீதிக்கட்சிக்காகத் தொடங்கப்பட்ட நாளேடுகள் எவை?
15. இலவசக் கல்வித் திட்டத்தை கொண்டுவந்தவர் யார்?

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

1. தாமிரபரணி ஆறு பற்றிக் குறிப்பு வரைக.
2. புதிய கற்காலம் பற்றி எழுதுக.
3. பல்லவரின் சிற்பக் கலை குறித்து எழுதுக.
4. முதலாம் குலோத்துங்கனின் அயல் நாட்டுத் தொடர்பினை விவரிக்க.
5. பிற்காலப் பாண்டியரின் கல்வி வளர்ச்சி பற்றிக் குறிப்பிடுக.
6. தஞ்சை மராட்டியரின் வாணிகம் குறித்து எழுதுக.
7. திருமலை நாயக்கரின் கலைப் பணிகள் பற்றி எழுதுக.
8. தந்தை பெரியார் பற்றிச் சிறு குறிப்பு வரைக.

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) சங்க கால ஆட்சிமுறை குறித்து கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) பல்லவர்களின் போர்களைப் பற்றி விவரிக்க.

2. (அ) சோழர்களின் நிருவாக முறையைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) நாயக்கர் ஆட்சியின் வரிவிதிப்பு முறைகள் குறித்து கட்டுரை வரைக.

3. (அ) பிற்காலப் பாண்டியர் காலத்தின் சமுதாய, பொருளாதார நிலைகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழகத்தின் விடுதலைக்குப் பின்னர் கல்வி மற்றும் இலக்கியம் பெற்றுள்ள வளர்ச்சி குறித்து விளக்கி வரைக.

***